மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 18/2021

பெயர் – மோகன்ராஜ்(பி.வா.சா.1)

நாள் – 09.08.2024

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி தொடர்ச்சி.

பிராது "ஆ" அட்டவணை சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்பதற்காக பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2005ம் ஆண்டிலேயே உயில் பிறப்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.4 ஆவணம் 26.05.2006ம் தேதி பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7, 8, 9 ஆவணங்கள் சர்வே எண்.393/26A பொறுத்ததாகும் என்றால் சரிதான். சர்வே எண்.393ல் சர்வே எண். 393/26A பூமியில் எந்த இடத்தில் அமைந்துள்ளது என்பதை காண்பிப்பதற்காக புல வரைபடம் மற்றும் ஆ பதிவேடு நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.9 ஆவணம் 24.08.2021ம் தேதியில் மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 ஆவணம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அது பற்றி எனது வழக்கறிஞரிடம் கேட்டேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ள வரைபடத்தை வாதி வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் இடையில் தென்வடலாக 14 அடி அகல கிழமேல் காலியிடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. ஆனால் அவ்வாறு காலியிடம் உள்ளது. அது எனக்கு பாத்தியப்பட்டது ஆகும். அந்த 14 அடி அகல கிழமேல் காலியிடத்தில் மின்கம்பம் உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. ஆனால் மின்கம்ப எங்கள் வீட்டிற்கு மேற்குபுறத்தில் உள்ளது. அந்த மின்கம்பத்திலிருந்து தான் அக்கம் பக்கம் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி வீட்டின் தென்புறத்தில் 8 ஜன்னல்கள் உள்ளன என்றும், அதில் சன்செட் உள்ளது என்று நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் என் வீட்டிற்கு முன்பு உள்ள தெருவில் போர்வெல்,

தாழ்வாரம், கிச்சன், பாத்ரூம் வாட்டர்டேங் இருப்பதாக கூறவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. ஆனால் அவை எல்லாம் உள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. வாதியின் வீட்டிற்கும் பின்புறம் தென்புறமாக பாதை உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் அந்த பாதை என் வீட்டிற்கு பின்புறம் உள்ள ராஜ்நாயக்கர் வீட்டிற்கு செல்லும் பாதையாகும். வாதி வீட்டிற்கு பின்புறம் உள்ள தென்வடல் பாதை பொதுபாதை என்றாலும், நான் வழக்கிற்காக ராஜ்நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7, 8, 9 ஆவணங்கள் பற்றி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பி.வா.சா.ஆ.7, 8, 9 ஆவணங்கள் வழக்கிற்காக நான் உற்பத்தி செய்ததால் தான் அந்த ஆவணங்கள் பற்றி எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும், வாதி வீட்டிற்கும் இடையே உள்ள பொதுபாதையை வாதி எனது அனுமதியின் பேரில் தான் பயன்படுத்தியுள்ளார் என்பது நான் சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும், வாதியின் வீட்டிற்கும் இடையில் உள்ள பாதை பொதுபாதை, அதை தான் ஊர் பொதுமக்களும் வாதியும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் இறப்புக்கு முன்பு அந்த இடத்தில் கற்கள் போட்டு வைத்திருந்தோம். அவரது இறப்பிற்கு பின்னிட்டு கற்களை நாங்கள் எடுத்துவிட்டோம். மேற்படி விதமாக நான் சொல்லுவது வழக்கிற்காக நான் சொல்லும் பொய் என்றால் சரியல்ல. வாதி அவரது வீட்டிற்கு தென்புறத்தில் உள்ள சுவரை பராமரிப்பதற்காக சென்று வருவதற்கு அந்த பொது பாதையை தவிர வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல. வாதி தவறாக வீடு கட்டியுள்ளார். வாதி தனது வீட்டின் தென்புறத்தில் உள்ள சுவரை பராமரிப்பதற்காக அந்த பொதுபாதையை தான் பயன்படுத்தி வருகிறார் என்றால் என்னுடைய அனுமதியின் பேரில் தான் பயன்படுத்தி வந்தார். பிராது பாதை வாதி அனுபவத்தை நானும், 2ம் பிரதிவாதியும் இடைஞ்சல் செய்து வருவதாக ஊர் பெரியவர்கள் பஞ்சாயத்து பேசி எங்களை பிரச்சனை செய்யவேண்டாம் என்று அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல. அவர்களை தான் அறிவுறுத்தினார்கள். தற்போதும் வாதி அதை கேட்க மறுக்கிறார்கள். 20.01.2021ம் தேதியில் வாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். காவல் துறையினர் வாதியை தான் சத்தம் போட்டு

அனுப்பினார்கள். வாதி தன் வீட்டிற்கு முன்பு போட்டிருந்த கல்லை அதற்கு பின்பு அகற்றிவிட்டார். 20.01.2021ம் தேதி வாதி 2ம் பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலீசார் விசாரித்ததில் அவர்கள் கொடுத்த அறிவுரையை நான் கேட்காத காரணத்தினால் இது சொத்து சம்மந்தமான பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தை வாதி அணுகியுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு 10.5 சென்ட் நிலம் பாத்தியம் என்பதை காண்பிப்பதற்காக உயிலுக்கு முன்புள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வீட்டு வரி ரசீதை 1965ம் ஆண்டிலிருந்து வைத்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஐ அந்த வீடு எனக்கு பாத்தியப்பட்டது என்று காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளதில் 1.4 சென்ட் நிலம் எனக்கு பாத்தியப்பட்டதாக தான் உள்ளது என்றால் சரியல்ல. 10.4 சென்ட் நிலத்தை தான் 1.4 சென்ட் என்று தவறாக எழுதப்பட்டுள்ளது. பிராதில் அ அயிட்ட சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்பதால், வாதியின் சகோதரர் நடராஜன் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் அல்ல என்றால் சரியல்ல. பிராது ஆ அயிட்ட சொத்து பொது பாதை என்பதால் அதை எங்கள் கிராமத்தில் உள்ளவர்கள் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், இந்த விபரம் எனக்கு நன்றாக தெரிந்திருந்தும் வழக்கிற்காக பொய்யான விபரங்களை கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 100 ஆண்டு காலமாக அந்த பாதை எங்கள் அனுபவத்தில் உள்ளது. பிராது பாதையை ஊர் பொது மக்கள் 100 ஆண்டு காலமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், அதை எனது சொந்த பாதை என்று சொல்லுவது பொய் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.